HMOP.No. 204/2023

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் – 20.02.2026

எ.ம.சா.1–முத்துவேல்பாண்டியன் த/பெ – கண்ணன்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

1) எனக்கும், மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணம் பெரியோர்களால் நிச்சயம் செய்யப்பட்ட திருமணம் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன் மற்றும் தம்பி. திருமண பேச்சுவார்த்தை நடந்த போது எனது அண்ணன் திருமணமாகி தனியாக வசித்து வந்தார், நான் எனது பெற்றோருடன் வசித்து வந்தேன். எனது பெற்றோர்கள் திருமண பேச்சுவார்த்தை நடத்தினர். திருமண பேச்சுவார்த்தையின் போது எனது பெற்றோர்கள் மனுதாரின் பெற்றோரிடம் நகை எதுவும் பேசவில்லை. திருமணத்திற்கு முன்னர் 3 மாதங்கள் நானும், மனுதாரும் போனில் பேசிக்கொள்வோம் என்றால் சரிதான். அப்போது எனக்கும், மனுதாரருக்கும் பிரச்சனை இல்லை என்றால் மனுதாரர் வேறு ஒருவரை காதலிப்பதாக கூறினார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் கார்த்திக் என்று கூறினார். அதன் பின்னர் எனது நண்பர்களும் மேற்படி நபர் பற்றி சொன்னார்கள்.

2) மேற்படி விபரம் தெரிந்த பின்னர் மனுதாரரை திருமணம் செய்யும் எண்ணத்தில் நான் இருந்தேன் என்றால் நான் திருமணம் வேண்டாம் என்று கூறினேன். திருமணத்திற்கு பின்னர் மேற்படி கார்த்திக் என்பவரால் எங்களுக்குள் பிரச்சனை வரவில்லை என்றால் குழந்தை பிறந்த 10 மாதத்தில் மீண்டும் எங்களுக்குள் கார்த்திக் என்பவரால் பிரச்சனை ஏற்பட்டது. கார்த்திக் உடன் மனுதாரர் பேசி வருவது சம்மந்தமாக

காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை, மனுதாரிடம் போனை வாங்கி அவரது தந்தை உடைத்து போட்டார்.

3) மேற்படி கார்த்திக் என்பவரை நான் நேரில் பார்க்கவில்லை, அவரை பற்றி விசாரித்து தெரிந்து கொள்ள விரும்பவில்லை. மனுதாரர் கார்த்திக் என்பவரை காதலித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், அவ்வாறு ஒரு நபர் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் திருமணத்தின் போது எவ்வளவு நகை போட்டு வந்தார் என்று தெரியாது. நானும், எனது பெற்றோரும் மனுதாரிடம் 8 பவுன் நகையும், ரூ.50,000/- மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும், ரூ.20,000/- ரொக்கமும் வரதட்சணையாக வாங்கினோம் என்றால் சரியல்ல, நான் மனுதாரின் வீட்டில் தான் இருந்து வந்தேன். இருசக்கர வாகனம் வேண்டும் என மனுதாரிடம் கேட்டு வாங்கினேன் என்றால் மனுதாரர் வீட்டில் கொடுத்த ரூ.25,000/-த்தை மனுதாரருக்கு இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தேன். எனக்கு இருசக்கர வாகனம் வாங்க பணம் எதுவும் பெறவில்லை. மேற்படி பொருட்கள் தற்போது வரை என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல, நான் மனுதாரருடன் அவரது வீட்டில் தான் இருந்து வந்தேன்.

4) நான் திருமணத்தின் போது சிவகாசி, பாலிமர் கம்பெனியில் வேலை பார்த்தேன். திருமணத்திற்கு பின்னர் 5 வருடங்களாக அங்கு வேலை பார்த்தேன். திருமணத்திற்கு பின்னர் நான் எனது பெற்றோருடன் 1.1/2 மாதம் குடியிருந்து வந்தேன். அவ்வாறு கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்த போது எனக்கும், எனது அண்ணிக்கும் இடையே தவறான உறவு இருந்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அது பொய் ஆகும். மனுதாரின் தாயார் தனது மகளுடன் வந்து இருக்குமாறு அழைத்ததால் மனுதாருடன்

அவரது வீட்டில் வசித்து வந்தேன்.

5) எனது மகன் எந்த பள்ளியில் படித்து வருகிறார் என்றால் ஒருமுறை பள்ளியில் சென்று எனது மகனை பார்க்க சென்றதால் மனுதாரர் என் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார், அதனால் மீண்டும் செல்லவில்லை. தற்போது வரை எனது குழந்தைகள் என்ன படித்து வருகிறார்கள் என்றால் குழந்தைகளை பார்க்க விடவில்லை. 2023 ம் வருடம் முதல் நான் குழந்தைகளை பார்க்கமுடியவில்லை. எனது மனைவியுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று கேட்டேன். அது குறித்து தனியாக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. திருமணம் முடிந்து தற்போது வரை நான் மனுதாரர் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, சூலக்கரை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன். போலிசார் மனுதாரரை அழைத்து விசாரித்தனர். மேற்படி புகார் மனுவை இவ்வழக்கில்தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6) நான் தான் சமூக வலைதளத்தில் எனது மனைவி மற்றும் மாமியார் பற்றி அவதூறான செய்திகளை பரப்பினேன் என்றால் சரியல்ல. 14.10.2023 ம் தேதி எனது மனைவி செல்போனில் பேசி கொண்டிருந்த போது நான் அடிப்பதாக 15.10.2023 ம் தேதி மனுதாரர் விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் அது பொய்யான புகார் ஆகும். எனது மனைவி வேறு ஒருவருடன் போனில் பேசினார். விசாரணைக்கு நானும், எனது தாயாரும் காவல்நிலையம் சென்றோம். எனது மனைவியுடன் பேசி கொண்டிருந்த நபரின் பெயர், செல்போன் எண் உள்ளிட்ட விபரங்களை போலிசாரிடம்

சொன்னேன். மேற்படி போனில் பேசிய நபர் பற்றிய விபரத்தை எனது எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7) மேற்படி விசாரணை முடிந்து 8 நாட்களில் எனது மனைவி விருதுநகர், அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரிதான், நான் சென்று பார்த்தேன், அருகில் வந்து பார்க்ககூடாது என்று கூறினார். வேனில் இருந்து இறங்கிய போது கீழே விழுந்து மனுதாருக்கு காயம் ஏற்பட்டது. நான் மனுதாரரை அடித்து காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல. நாங்கள் 3 வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். நான் கீழே விழுந்ததில் இருந்து 10 மாதங்களாக வேலைக்கு செல்லவில்லை. 10 மாதங்களுக்கு முன்பு நான் மாத சம்பளம் ரூ.12,000/– பெற்று வந்தேன்.

8) குழந்தை பிறந்ததில் இருந்து குழந்தைக்காக தனியாக சேமிப்பு வைத்துள்ளேனா என்றால் எனது மாத சம்பளத்தை எனது மாமனார் மற்றும் மாமியாரிடம் கொடுத்தேன். பிரிந்த 2 வருட சம்பளத்தை எனது அம்மாவிடம் கொடுத்து வைத்தேன். விபத்தினால் மேற்படி தொகை எனக்கு செலவாகிவிட்டது. நான் திருமணம் முடிந்த காலம் முதல் குடும்பத்திற்காக வாழவில்லை என்றும், குழந்தைகளின் எதிர்காலத்திற்கு எதுவும் சேர்த்து வைக்கவில்லை என்றால் சரியல்ல. குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்காக மனுதாரர் வேலைக்கு சென்றார் என்றும், நான் சந்தேகப்பட்டு அவரை துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் நானும், எனது அக்கா மகள் ராணியும் உள்ளோம். விபத்தில் காயம் பட்டு இருந்த போது என்னை பார்க்க வந்த போது எடுத்த புகைப்படம் ஆகும். மேற்படி புகைப்படம் எனது

இன்டாஸ்கிராம்–ல் ஸ்டோரியாக இருந்ததை மனுதாரர் எடுத்துள்ளார். மேற்படி புகைபடத்தை பதிவேற்றம் செய்து சுமார் 7 மாதம் இருக்கும். மேற்படி புகைப்படங்களில் நானும், ராணியும் நெருக்கமாக உள்ளோம் என்றால் எனது அக்கா மகள் ஆவார்.

9) நானும், மேற்படி ராணி என்பவரும் அவரது குழந்தையுடன் சிவகாசியில் தனிக்குடித்தனம் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல, நான் அம்மாவுடன் வசித்து வருகிறேன். திருமணம் முடிந்த காலம் முதல் நான் மனுதாரரை சந்தேகப்பட்டு அடித்து கொடுமைப்படுத்தியதால் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ முடியாத நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரிய விவாகரத்து பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.